ஸ்ரீ:
ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

# எம்பெருமானார்
# வாழி திருநாமம்

சீராரும் பெரும்பூதூர் சிறக்க வந்தோன் வாழியே
  சித்திரையில் ஆதிரை நாள் செகத்துதித்தோன் வாழியே
ஆராத அருளாளர் அருளுடையோன் வாழியே
  அருமறை சொல் பெரிய நம்பி அடி பணிந்தான் வாழியே
ஏராரும் பாஷியத்தை ஈன்ற பிரான் வாழியே
  எழுபத்து நால்வரையும் எமக்களித்தான் வாழியே
ஓராத பரசமயக் குறும்பறுத்தான் வாழியே
  ஒளி திகழும் எதிராசர் இணை அடிகள் வாழியே

---